RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s28

OPEN ACCESS

# அத்வைதக் கோட்பாடும் ஒருமைவாதமும்

## முருகு தயாநிதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தேசிய கல்வி நிறுவகம், த.பெ. இலக்கம் 21, மஹரகம, இலங்கை.

# Advaita Doctrine and Unity

## Murugu Thayanithy [a, *]

[a] Department of Tamil, National Institute of Education, P.O. Box 21, Maharagama, Sri Lanka

* Corresponding Author: muruguthayanithy@gmail.com

Received: 04-01-2021
Revised: 12-04-2021
Accepted: 17-04-2021
Published: 30-04-2021

Check for updates

### ABSTRACT

The idea of unity arises in the Vedas in the world of Indian philosophy. Though there is a natural worship, it is finally discovered that all the gods are the same power. In later times, all the deities were worshipped as Prajapati. The thought of unity continued to be immersed in the upanishads that finally arose in the Vedas. The lord was called Brahmma. In the period, Sankara has given importance to Advaita thought, in order to clarify the views found in the Upanishads. The Advaita theory speaks of the fact that it is a true object. That is The Brahman, and there is no defect in it. For this he speaks of vivatvatism, prativivavada, and avatarvatism. He is strongly presenting the idea that the world and life arise from the Brahmana. But the following principles of Vishitatvaita, Dvaita and Saiva saivism are the three truthful of the Lord, life and the world. But they too are willing to speak of the lord who is not less. In this way, we cansee that the advaita doctrine of Sankarar cannot be presented as a description of the doctrine by refusing or standing away. So all theories speak of a true object in the end, which is the object of the divine doctrine that is now widely worshipped throughout the world. The Vedas, Upanishads, Vedanta and Saiva siddhanta concepts are presented to the forefront of this article. The study is explained in a way that is compared with history to find out the truth of the study.

**Keywords:** Unity, Advaita, Sankarar Vedanta, Saiva siddhanta.

## முன்னுரை

அத்வைதம் பற்றிய தொலைநோக்கு பரந்தும் விரிந்தும் நிற்கின்றது. இறைவன் ஒன்று என்ற தன்மையினைப் பேசுவதற்காக சங்கரர், இராமனுஷர், மத்துவர், சைவசித்தாந்திகள் அதனை நோக்கிய தன்மையில் சிறிய வேறுபாடு காணப்படுவதனை உணரமுடிகின்றது. அத்வைத சிந்தனைப்படி இறுதி ஒடுக்கத்தில் உள்ளது ஒன்றே ஒன்றுதான் என்பது புலனாகின்றது. இதனைச் சங்கரர் கேவலாத்வைதம் என்றும், இராமனுஷர் விஷிட்டாத்வைதம் என்றும் சைவ சித்தாந்திகள் சுத்தாத்வைதம் என்ற நிலையிலும் பேசுகின்றனர். இங்கு அத்வைதம் என்ற நிலையில் பேசப்படுவது சங்கரருடைய கோட்பாட்டையே குறிக்கும். அத்வைதம் என்பது அ ◌ூ துவைதம் எனப் பிரிந்து வருகின்ற போது ஒவ்வொருவரும் பொருள் கொள்ளு நிலை சற்று வித்தியாசமானதாகும். "அ" என்பதனைச் சங்கரரும் இராமணுஷரும் இல்லை என்ற நிலையிலும் மத்துவர் மறுதலை என்ற பொருளிலும் சைவசித்தாந்திகள் அல்ல என்ற பொருளிலும் கையாள்வதாக சிவஞானமுனிவர் தமது சிவஞான பாடியத்திலே குறிப்பிடுகின்றார். இங்கு கொடுக்கப்படுகின்ற விளக்கத்தின் தன்மையில் அத்வைதத்தின்

உயர்ந்த இடம் தெளிவாகின்றது. இந்த அத்வைத சிந்தனைகள் யாவும் வேதத்தினை அடியொற்றியே எழுந்திருக்கின்றது.

## வேதம்

வேதம் என்பது 'வித்' எனும் வடமொழிச் சொல்லில் இருந்து தோன்றியது. அதன் பொருள் அறிதல் என்பதாகும். இந்த அறிதல் எனும் பதம் இரண்டு தன்மைகளில் வருகின்றது (Lakshmanan, 1960).

1. மனிதன் தன் வாழ்க்கையினை இனிதாக்குவதற்கு உலகிலுள்ள பொருள்களை எவ்வெவ் விதமாகப் பயன்படுத்தலாம் என்பதனை அறிவது.
2. இந்த வாழ்க்கையும் இந்த உலகமும் எதற்காக என்பதை அறிவது.

முதலாவது அறிவுக்கு உலகிலுள்ள பொருள்களும் உலகின் பகுதிகளும் விஷயமாக அமைய, இரண்டாவது வகை அறிவு இந்த உலகம் எதிலிருந்து, எங்ஙனம், எதற்காக உற்பத்தியானது என்பதனை ஆராகின்றது. எனவே, இந்த உலகம் காணப்படாத மூலப் பொருளிலிருந்தே உற்பத்தியாகின்றது என்ற பேருண்மையொன்றைத்தான் ஒவ்வொன்றுக்கும் காரணம் ஒவ்வொரு தெய்வமே என்றதன் மூலம் இங்கே வேத மந்திரங்கள் குறிப்பாக உணர்த்துகின்றன (Lakshmanan, 1960). அதாவது, மின்னலுக்கும் முழக்கத்திற்கும் காரணம் இந்திரன் என்றும் அதனால் வரும் மழைக்குக் காரணம் வருணன் என்றும் காட்டப்படுகின்றது. அதாவது, ஒரு செயற்பாடு இடம்பெறுவதற்கு இன்னொன்று காரணமாக அமைகின்றமையினை காரண - காரியத் தொடரிபினால் விளக்கப்படுகின்றது (Subramaniyam ilayathambi 1987). இந்த அறிவின் எழுச்சியானது ஒரு தெய்வத் தன்மைக்கு இட்டுச் செல்கின்றது. எனவே, இவ்வுலகில் காணப்படும் நிலம், நீர், தீ போன்றவற்றோடு உலகம் முடிவடைவதில்லை. இவற்றின் தொடக்கங்கள் நமது சாதாரண காட்சிக்குப் புலனாவதில்லை. கண்முன் காணப்படும் இந்த உலகம் காணப்படாத மூலப்பொருளில் இருந்தே உற்பத்தியாகின்றது என்பதனை விளக்கி, ஒவ்வொரு செயற்பாடும் ஒவ்வொரு தெய்வத்தினால் இடம்பெறுகின்றது என்பதனை மந்திரங்கள் முன்வைக்கின்றன.5 உலகம் பற்றிய ஆராய்ச்சிகளின் தொடர்ச்சியால், அறிவுடைய ஒருவனே இந்த உலக உற்பத்திக்குக் காரணம் என்பதனை வேதங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால், அறிவுடைய இறைவன் அறிவற்ற சடப் பொருளாகிய இந்த உலகை எதிலிருந்து உற்பத்தி செய்தான் என்ற வினா எழுப்பப்படுகின்றது. இதற்கு தன்னிடத்தில் இருந்து உற்பத்தி செய்தான், புறம்பான ஒரு பொருளில் இருந்து உற்பத்தி செய்தான் என்ற வகையில் விடை கிடைகின்றது. இவ்வாறு உலகம் பற்றிய சிந்தனையின் வெளிப்பாட்டை முன்வைத்து வேதங்கள் ஒரு தெய்வம் பற்றிப் பேசுகின்றது. ஒரு தெய்வக் கோட்பாடு விஷ்வகர்மன், பிரஜாபதி என்ற சொற்களால் எழுகின்றது. விஷ்வகர்மன் எல்லாவற்றையும் செய்பவன் என்றும் பிரஜாபதி பிரஜைகளின் தலைவன் என்றும் போற்றப்படுகின்றனர். ஒரு தெய்வ வாதத்தினை ஆங்கிலத்தில் Monotheism என்று குறிப்பிடுகின்றனர் சுவாமி கெங்காதரானந்தஜீ, (Swami Gangadharanthaji, 1990).

## தெய்வங்கள்

வேதங்களில் இயற்கைத் தெய்வம் 33 என்று குறிப்பிடப்படுகின்றது. அவற்றை விண்ணுலகத்துக்குரியவை 11 தெய்வங்கள் என்றும் மண்ணுலகத்துக்குரியவை 11 தெய்வங்கள் என்றும் இடை யுலகத்துக்குரியவை 11 தெய்வங்கள் என்றும் வகைப்படுத்தி, இறுதியில் அத்தெய்வங்களின் சக்திகள் ஒரே தன்மை கொண்டவை என்று வேதங்கள் குறிப்பிடுகின்றன சுவாமி கெங்காதரானந்தஜீ, (Swami Gangadharanthaji,1990). இவ்வாறான தன்மையில்தான் தெய்வம், உலகம், ஆன்மா என்பவற்றுக்கான விளக்கம் வேதாந்தங்களில் மேலெழுகின்றன. அந்த மேலெழுகை சங்கரருடைய சிந்தனையில் அத்வைதக் கோட்பாடாக முன்வைக்கப்படுகின்றது. அதாவது, அறிவுடைய ஒருவனே இந்த உலக உற்பத்திக்குக் காரணம் என்பதனை வேதங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால், அறிவுடைய இறைவன் அறிவற்ற சடப் பொருளாகிய இந்த உலகை எதிலிருந்து உற்பத்தி செய்தான்? என்ற வினா எழுப்பப்படுகின்றது. இதற்கு தன்னிடத்தில் இருந்து உற்பத்தி செய்தான், புறம்பான ஒரு பொருளில்

இருந்து உற்பத்தி செய்தான் என்ற வகையில் விடை கிடைகின்றது. இந்த இடத்தில் இருந்துதான் சங்கரருடைய வாதம் ஆரம்பமாகின்றது. இங்கு அவர் பரிபூரணம் பற்றியும் பரிபூரணம் குறைந்த நிலை பற்றியும் பேசுகின்றார். அதுவே நிற்குணப் பிரமமாகவும், ஈஸ்வரனாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆகவே, வேதங்களில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு சங்கரர் கொடுத்த விளக்கம் சித்தாந்த உலகில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி நின்றது.

## வேதாந்தம்

வேதாந்தம் என்பது, வேதத்தின் இறுதியில் எழுந்த உபநிடதங்களையே குறிக்கின்றது (Harianna, 2008). உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பன பிரஸ்தானதிரயம் எனும் பெயரால் வழங்கப்படுகின்றது. எனவே, அத்வைதக் கோட்பாட்டுக்கான மூலம் வேதங்களிலே எழுகின்றமையினை அவதானிக்கின்றோம். அதற்கான விளக்கம் உபநிடதங்களில் கொடுக்கப்படுகின்றது. உபநிடதங்கள் வேதங்களில் இருந்து வேறானவை அல்ல. அவையும் வேதங்களின் பகுதியாகவும் சாரமாகவும் அமைகின்றது. அதனால் உபநிடதங்கள் வேதாந்தம் என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. வேதங்களின் இறுதியாக உபநிடதம் வைக்கப்பட்டமைக்குக் காரணம் அதன் சாராம்சத்தைக் கூறுவதாலாகும். அவ்வாறாயின் வேதத்தின் சாரம்சம் ஒரு தெய்வம் என்பதாகும். இதனை பிரம்மம் எனும் நிலையில் உபநிடதங்கள் விளக்குகின்றன. பிரம்மம் சப்பிரபஞ்சம், நிஷ்பிரபஞ்சம் என்ற நிலையில் அமைகின்றது. இவை முறையே சகுணப்பிரம்மம், நிற்குணப்பிரம்மம் என்று வருகின்றது. உலகத்தோடு கூடிய நிலை சப்பிரபஞ்சம் என்றும் உலகத்தைக் கடந்த நிலை நிஷ்பிரபஞ்சம் என்றும் கொள்ளப்படுகின்றது. இவை முறையே சாந்தோக்கிய மற்றும் பிரகதாரணிய உபநிடதங்களில் கூறப்படும் கருத்துக்களாகும் (Tirujnanasambandapillai, 1993). அதாவது, இந்த உலகம் பிரமத்துள் அடங்குமே தவிர பிரம்மன் உலகத்துள் அடங்காது என்ற அத்வைத சிந்தனை மேலெழுகின்றது. அதாவது, பிரமத்தின் உயர்ந்த தன்மைகளை வெளிப்படுத்தும் உபநிடதங்கள் இறுதியில் ஒன்று என்ற பேருண்மையினைப் பேசுகின்றது.

இவ்வாறான சூழலில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சங்கரர் உபநிடதங்களுக்கு விளக்கம் தருகின்றார். தான் ஆராய்ந்து கண்ட முடிவுகளின் படி, பிரமம் மட்டும் உண்மை என்பதனையும் ஆன்மா, உலகம் அதன் தோற்றம் என்பதனையும் முன்வைக்கின்றார். அதற்காக அவர் அத்வைதம் பற்றிப் பேசுகின்றார். அத்வைதம் என்பது அ ௌ துவைதம் எனப் பிரிகின்றது. இங்கு ‘அ’ என்பது அல்ல என்ற பொருளிலும் துவைதம் என்பது இரண்டு என்ற பொருளிலும் வருகின்றது. அவ்வாறாயின் இரண்டு அல்ல ஒன்று என்ற விடை பெறப்படுகின்றது. அதாவது, பிரம்மம் மட்டும் உண்மையானது என்ற கருத்தினை இதனூடாகத் தெளிவுபடுத்துகின்றார். இவருடைய கருத்துப்படி உலகில் உண்மையானது ஒன்றுதான் இருக்கமுடியம் என்பதனையும் மற்றவையெல்லாம் அதனைச் சார்ந்தே செயற்படும் தோற்றப் பொருள் என்பதனைக் காட்டுகின்றார்.

## அத்வைதக் கோட்பாடு

அத்வைதக் கோட்பாடு பற்றிய தெளிவினைத் தந்தவர் சங்கரர். இவர் மேலும், அக்கருத்தினைத் தெளிவுபடுத்துவதற்காக பலவகை வாதங்களை முன்வைக்கின்றார். அவை ஒவ்வான்றும் நிற்குணப் பிரம்மம் பற்றியே பேசுகின்றன. விவத்தவாதத்தினை முன்வைக்கும் சங்கரர், அதனை கயிறு பாம்பாகத் தெரிவது போல எனக் காட்டுகின்றார். இருட்டு வேளையில் செல்லும் ஒருவனுக்கு கயிறு பாம்பாகத் தோற்றமளிக்கின்றது. அங்கு இருள் நீங்கியதும், கயிறு மட்டுமே காணப்படுகின்றது என்று, அத்வைதத்தின் உயர்ந்த தன்மையினை நிறுவுகின்றார். இதன்மூலம் “உளது இலதாகாது, இலது உளதாகாது” என்பதால் “உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும், இல்லாததில் இருந்து ஒருபோதும் உள்ளது தோன்றாது” என்பதனைத் தெளிவாகவே முன்வைக்கின்றார் (Lakshmanan, 1960). இங்கு பாம்பாகக் காட்சி தந்த பொருள் கயிற்றின் தோற்றமாகும். அதுபோல், பிரமத்தின் தோற்றமாகவே உலகம் இயங்குகின்றமையினை, காரண - காரிய அடிப்படையில் நிறுவுகின்றார். அதாவது, இரண்டு உண்மைப் பொருள் இருக்க முடியாது என்பது தெளிவாகின்றது.

இவ்வாறான நிலையில் பிற்பட்ட காலத்தில் இராமனுஷர், மத்துவர் ஆகியயோர் விஷிட்டாத்வைதம், துவைதம் எனும் கோட்பாடுகளை முன்வைத்து, இல்லாத ஒன்று எவ்வாறு தோன்ற முடியும் என்று வாதம் செய்கின்றனர். அதற்கு சங்கரரின் பத்மநாபர் போன்ற சீடர்கள் தெளிவான விளக்கம் கொடுக்கின்றனர். இவ்வாறு தோற்றப் பொருளாகக் காட்சியளிப்பதற்குக் காரணம் மாயையாகும். எல்லை இல்லாத ஒன்றை எல்லைப்படுத்தவதும் உருவம் இல்லாத ஒன்றை உருவப்படுத்தவதும் மயையின் குணங்களாகும். எல்லை இல்லாத மூலப்பொருளில் இருந்தே எல்லைக்குட்பட்ட இந்த உலகும் உயிரக்ளும் உற்பத்தியாகின்றன என்பதனை பிறாட்லி, கிறீன், ஷில்லர் போன்ற மேலைநாட்டுத் துத்துவஞானிகளும் ஒப்புக்கொள்கின்றனர். பிரம்மம் பூரணமானது, இந்த நிலையில் மாயைக்கு இடமில்லை. பிரமம் பரிபூரணம் குறையத் தொடங்கும் நிலையில் மாயை அங்கு செயற்படுகின்றது. இந்த நிலையில் பிரம்மம் ஈஸ்வரனாகக் காட்சியளிக்கின்றார். அது குறைபாடுடைய நிலையாகும். இந்த நிலையில் இருந்தே ஈஸ்வரன் உலகமாகவும் ஆன்மாக்களாகவும் காட்சி கொடுக்கின்றார் (Harianna, 2008). இறுதியில் இவை பிரமத்துள் அடங்கிவிடுகின்றன என்ற ஒருமை வாதம் முன்வைக்கப்படுகின்றது. வேதாந்தத்தில் ஈஸ்வரனுக்கு உயர்ந்த இடமில்லை. ஆனால், வைச சித்தாந்திகள் ஈஸ்வரனுக்கு உயர்ந்த இடம் கொடுக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சங்கரருடைய அத்வைதம் நிற்குணப் பிரமத்திற்கு முதன் கொடுத்து, ஈஸ்வரனை இரண்டாம் நிலைக்குக் கொண்டு செல்கின்றது. இந்நிலையில்தான் உலகமும் ஆன்மாக்களும் படைக்கப்படுகின்றன. ஈஸ்வரன், சைவசித்தாந்திகள் பேசும் அத்வைதத்தில் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளான். ஆதியிலும் அந்தத்திலும் பொருள்கள் பல என்பதனையே முன்வைத்து, உயிர்களின் நலனுக்காக மாயையில் இருந்து தனு, கரண, புவனங்களைத் தோற்றுவிப்பதே சிருஷ்டியாகும். இதனைச் செய்பவன் ஈஸ்வரன் என்பதோடு அவனே உயர்ந்தவன் (Harianna, 2008). இங்கு ஈஸ்வரன் பற்றிப் பேசுவதோடு படைப்புப் பற்றியும் பேசப்படுகின்றது. சித்தாந்தத்தின் கருத்துப்படி உள்ளதில் இருந்து தோன்றிய உலகமும் உயிர்களும் உண்மை என்பது முன்வைக்கப்படுகின்றது. இங்கு இறைவன் ஒன்றாயும் உடனாயும் வேறாயும் நிற்பதனைச் சித்தாந்தம் காட்டுகின்றது. இங்கு படைப்பு என்பதும் முதல்வன் என்பதும் மாறுபடாத தன்மையிலே முன்வைக்கப்படுகின்றது. சித்தாந்திகளும் இறைவனுக்கு தடத்தலக்கணம் பற்றியும் சொரூபலக்கணம் பற்றியும் முன்வைத்து, சொரூபலக்கணம் குணங்குறிகளைக் கடந்தவை என்றும் தடத்தலக்கணம் படைப்பு முதலிய தொழில்களோடு சம்பந்தப்பட்டு ஆன்மாக்களுக்கு அருள் கொடுப்பதாகவும் காட்டுகின்றனர். ஆனால், மத்துவர் பேசும் ஈசுவரன் இருப்பு, ஞானம் ஆனந்தம் என்பன ஈசுவரனுக்குரிய பதார்த்தங்கள். பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பவரும், அழிப்பவரும் அவரே. அதே வேளை சீவன்களில் உள்நின்று அவற்றை இயக்கி ஆள்பவரும் அவரே. பூரணத்துவம் வாய்ந்த அவர் கன்மங்களை நெறிப்படுத்தும் தலைவரும் ஆவார். இலட்சுமி அவருக்கு சக்தியாவாள். இலட்சுமி ஓரளவு ஈசுவரனிலும் தாழ்ந்தவரே. ஈசுவரன் விக்கிரகங்களில் எழுந்தருளி அடியார்களின் வழிபாட்டிற்கு உரியவராகின்றார். ஆகவே, உலகம் பற்றிய கோட்பாட்டுக்கு கொடுக்கப்படுகின்ற விளக்கம் தெய்வத்தின் உயர்ந்த இடத்தையே அடையாளப்படுத்தி, அத்வைத சிந்தனையில் இருந்து விலகமுடியாதபடி காணப்படுகின்றமையினை உணரமுடிகின்றது.

அத்வைதக் கோட்பாட்டின்படி சங்கரர் ஆன்மா, பிரமத்தின் தோற்றம் என்றே காட்டுகின்றார். அதனை நிறுவுவதற்கு அவர் பிரதிவிம்பவாதம், அவற்சேதவாதம் என்ற வாதங்களை முன்வைக்கின்றார். அதாவது வானில் தோன்றும் ஒரு சந்திரன், நீர் நிலைகளில் பலவாறாகக் காட்சியளிப்பதற்குக் காரணம் பூமியில் காணப்படும் தடைகளினாலாகும். இந்தத் தடைகள் இல்லாமல் போகும்போது வானில் உள்ள சந்திரன் மட்டுமே காட்சியளிக்கப் போகின்றது. இதுபோல், பிரம்மமே ஆன்மாக்களாகக் காட்சி கொடுக்கின்றது என்றார். இவ்வாறாக இவர் பல உதாரணங்களைக் முன்வைத்து கொடுக்கின்ற விளக்கம் பொருத்தமாக அமைந்தாலும், இராமனுஷர் விஷிட்டத்வைதக் கோட்பாட்டினை முன்வைத்து பரிணாமவாதம் பேசுகின்றார். அவருடைய வாதத்தில் அசித், சித், ஈஸ்வரன் ஆகிய மூன்றும் உண்மை என்கின்றார். இதனை தத்துவத்திரயம் என்பர். அதாவது உலகம், உயிர், இறைவன் என்பவை உண்மைப் பொருள் என்றும் இறைவனே உலகையும் உயிர்களையும் அந்தர்யாமியாய் உள்நின்று இயக்குகின்றான் என்றும், ஒரே ஒரு பொருளுக்கு முதன்மை கொடுத்து ஏனையவற்றைத் தாம்பேசும் பொருளுக்குச் சரீரமாக்கி அப்பொருளுக்கு முதன்மை கொடுக்கின்றார்.

எவ்வாறாயினும் எதைப் பேசினாலும் இறுதியில் ஒன்று என்ற பரம்பொருளைக் காட்டுவதற்கே இராமனுஷர் வருகின்றார். ஆகவே, விஷிட்டாத்வைதக் கோட்பாடு, அத்வைதத் கோட்பாட்டினை விமர்சனம் செய்யவோ, அதற்கு விளக்கம் கொடுக்கவோ முன்வந்த போதும், இறுதியில் ஒன்று என்ற பரம்பொருட் தன்மையினை முன்வைக்கின்றமையினைக் காணமுடிகின்றது.

மத்தவர், சங்கரருடைய அத்வைதக் கொள்ளைக்கு விளக்கம் கொடுத்தமையினால் துவைதம் எனப்பட்டது. துவைதம் என்பது, இரண்டு என்பதாகும். ஆன்மா வேறு இறைவன் வேறு அல்ல, இவை இரண்டும் இரண்டுதான் இரண்டையும் வற்புறுத்துவதால் துவைதம் எனப்பட்டது. அதனைத் தெளிவுபடுத்துவதற்காக அவர் ஐந்து வகையான பேதங்களைக் குறிப்பிட்டு இறை, உலகம், உயிர் என்ற மூன்றிடையும் எக்காலத்திலும் பேதம் உண்டு என்றார்.

1. சீவன்களுக்கும் சீவன்களுக்கும் இடையில் காணப்படும் பேதம், சீவபரஸ்பர பேதம்
2. சீவன்களுக்கும் ஈசுவரனுக்கும் இடையில் உள்ள பேதம், சீவேஸ்வர பேதம்
3. சீவன்களுக்கு சடப்பொருட்களுக்கும் இடையில் உள்ள பேதம், சீவசட பேதம்
4. சடப் பொருள்களிடையே காணப்படும் பேதம், சட பரஸ்பர பேதம்
5. சடங்களுக்கும் ஈசுவரனுக்குமிடையே காணப்படும் பேதம், சடேஸ்பரபேதம்

என்று வேற்றுமை பேசுகின்றார் (Lakshmanan, 1960).

இறுதி ஒடுக்கமே மேலானது என்பதனை எல்லாத் தத்துவவாதிகளும் ஒப்புக் கொள்கின்றனர். இங்கு எல்லோரும் ஒன்றுபடுகின்றனர். அத்வைத வேதாந்தப்படி உயர்கள் பிரமத்தினை உணர்வதே முத்தியாகும் என்ற தன்மை யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இறைவனிலே தோன்றியது இறைவனுடனே சங்கமமாகின்றது என்ற அத்வைதக் கோட்பாடு இங்கு நிரூபணமாகின்றது. பிரமத்தின் தோற்றமாகக் காட்சியளிக்கும் உலகும், உயிர்களும் என்றோ ஒரு நாள் பிரமத்தையே சென்றடையும் போது கேட்கப்பட்ட வினாக்கள் எம்மைவிட்டு மறைந்து செல்கின்றன. கேள்விகளுக்கு இடம் இல்லாமல் போவதனால் உலகில் எஞ்சி நிற்பது ஒரு பொருளே அதுவே பிரம்மம். இங்கு ஆன்மாவே பிரம்மம் என்ற கோட்பாடு நிருபிக்கப்படுகின்றது. இதனால், பரமாத்மா என்ற கோட்பாடு மேலெழுகின்றது. இராமனுஷர் கருத்துப்படி ஆன்மா வைகுண்டலத்தைச் சென்றடைவது அல்லது விஷ்ணுவின் பாதார விந்தங்களைச் சென்றடைவது முத்தி என்றும், சைவசித்தாந்தம் இறைவனுடன் ஆன்மா இரண்டறக் கலத்தலே முத்தி என்பதனையும் முன்வைக்கின்றது. முத்தி பற்றிய கருத்து சமண, பௌத்த மதங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வாறு கிடைகின்ற முத்தி சீவன் முத்தி, விதேக முத்தி என்ற நிலையில் அமைகின்றது. சீவன் முத்தி என்பது, உடலோடு உயிர் இருக்கும் போது கிடைப்பதென்றும், விதேக முத்தி என்பது உடலை விட்டு உயிர் பிரிந்த பின்னர் கிடைப்பது என்றும் பொருள்பட நிற்கின்றது. சைவசித்தாந்தத்தில் முத்தி பற்றிய கொள்கை தெளிவாகவே வருகின்றது. அதாவது அத்துவிதமாய்க் ஆன்மா இறைவனுடன் கலத்தலை முத்தி என்பர் மணிவாசகர் “முத்தி நெறி அறியாத” என்று அதன் தன்மையினைக் குறிப்பிடுகின்றார். ஆகவே, ஆன்மா தான், பிரமத்தின் கூறு என எப்போது உர்கின்றதோ அப்போது அது பிரமமாகிவிடுகின்றது என்ற கருத்து வேதாந்திகளாலும் சித்தாந்திகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. இதனை ஆன்மா, இறைவனுடன் அத்துவிதமாய் கலத்தல் என்று சிவஞானபோதம் குறிப்பிடுகின்றது. இந்த நிலையில் இறைவனும் ஆன்மாவும் ஒன்றாகிவிடுகின்றது. இதனை “ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி” என்று மணிவாசகர் காட்டுகின்றார்.

## முடிவுரை

அத்வைதம் என்ற சிந்தனை வேதங்களின் மந்திரப் பகுதயிலில் மேலெழும்போதும், அறிவுடைய ஒருவனே இந்த உலக உற்பத்திக்குக் காரணம் என்பதனை வேதங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால், அறிவுடைய இறைவன் அறிவற்ற சடப் பொருளாகிய இந்த உலகை எதிலிருந்து உற்பத்தி செய்தான் என்ற வினா எழுப்பப்படுகின்றது. இதற்கான விளக்கம் வேதத்தின் இறுதியாகத் தோன்றிய

உபநிடதங்களிலே கொடுக்கப்படுகின்றது. அதாவது, இங்குதான் இறைவனுக்கு இரண்டு நிலைகளை முன்வைத்து சங்கரர், அதற்கான விளக்கத்தினைக் கொடுக்கின்றார். இங்கு உலகம் எவ்வாறு தோன்றியது என்ற கருத்துப் புலனாகின்றது. சங்கரரைத் தொடர்ந்து இராமனுஷர், மத்துவர், சைவசித்தாந்திகள் என்று பல விளக்க உரைகள் பிற்பட்ட காலம் வரை எழுகின்றன. அந்த விளக்கங்களுக் கொல்லாம் சங்கரருடைய சீடர்கள் விளக்கம் கொடுத்து அத்வைத வேதாந்தத்தின் முழுமையினை முன்வைத்த வண்ணமே உள்ளனர். கோட்பாடுகள் பல எழுந்தாலும் இறுதியாக சங்கரருடைய அத்வைதத்தினை விட்டு விலகிச் செல்லமுடியாமல் இருப்பதனை உணரமுடிகின்றது. ஆகவே, வேதாந்தக் கோட்பாட்டின்படி, உலகில் ஒன்றுதான் உண்மையாக இருக்கமுடியும் என்பதும் ஏனைய யாவும் அதன் தோற்றமாகத்தான் இருக்க வேண்டும் என்ற தத்துவஞானம் எற்றுக் கொள்ளத்தக்க வகையிலே அமைகின்றது. அதுவே, யாவரும் முன்வைக்கும் இறைக்கோட்பாடாக உலகெங்கும் பரிணாமம் பெற்றுள்ளது என்பதனை "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி என்ற மணிவாசகர் வாக்கால் உணரமுடிகின்றது.

## References


Harianna, M., (2008) Indian Philosophy, Kumaran Book House, Chennai, India

Kalaivani Ramanathan, (1998) Saiva Siddantha Meiporuliyal, Jaffna, Sri Lanka.

Lakshmanan, K., (1960) Indian Philosophy, Palaniyappa Brothers, Chennai, India

Lakshmanan, K., (1997) Indian Philosophical wisdom, Palaniyappa brothers, Chennai, India

Subramaniyam ilayathambi, (1987) Vedantha thelivam Saiva Siddhantam, Saiva Siddhanta Publishing, Jaffna, Sri Lanka

Swami Gangadharanthaji, (1990) Veda book, Sivayoga Samajam, Jaffna, Sri Lanka.

Tirujnanasambandapillai, M., (1993) Explanation of Saiva Siddhantam, Saiva Siddhanta Publishing, Jaffna, Sri Lanka



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License